**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 1 - 2018**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்- பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், அப்போதைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சான தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுரம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5,166 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,789 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்க்பட வெண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. பினனர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2020 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 20.19 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத ரூபா 2 மில்லியன் தொகையான சர்வதேச மாநாட்டு செலவினம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட பங்களிப்பு பெறுகைகள் குறைத்துக் கூறப்பட்டது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் பிரயோகிக்கப்பட்ட நடைமுறையின் பிரகாரம் உள்ளீட்டு வரி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட நிதிகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. செயற்திட்டமானது நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயலாளரின் அனுமதியுடன் சமுதாய மற்றும் நீர் வழங்கல் சேவைகளில் மூன்றாவது சர்வதேச மாநாடு நடாத்தவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 2 மில்லியன் தொகை விடுவித்திருந்தது. | இலங்கை அரசாங்கத்திடம் இருந்தான மொத்த பங்களிப்புத் தொகை பொதுத் திறைசேரியின் பதிவேடுகளுடன் இணக்கம் செய்வதற்கு இயலக்கூடியவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த ரூபா 65.46 மில்லியன் தொகையான வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் தவறுதாலாக நடைமுறை வெலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறை வெலை அதிகரித்து காட்டப்பட்டது. | அவசியமான கணக்கீட்டு பதிவுகற்கு வேண்டுகை செய்யப்படுமாயின் கணக்கீட்டுப் பதிவேடுகளில் அனுமதிக்கப்படும். | வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் புறம்பாக காட்டப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 08 கூறுகளைக் கொண்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 22.67 சதவீதமான மெதுவான முன்னெற்றத்தில் இருந்தது. மேலும் அவற்றில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்தவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) றம்பேவ மற்றும் மதவாச்சியவில் நீர்த் தேக்க வசதி, தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம், நிலத்தடி நீர் தொட்டிகள், உயர்த்தப்பட்ட தொட்டிகள் மற்றும் பிரதான பரிமாற்றம் மற்றும் பிரதான விநியோகத்தின் குழாயிடல் என்பவற்றின் மீதான செயற்திட்டத்தின் பிரதான நிர்மாண ஒப்பந்தங்கள் வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் என்பவற்றின் தாமதம் மற்றும் கொள்வனவு நடைமுறைகளை அமுலாக்குவதில் நீண்ட காலம் எடுத்தல் என்பன காரணமாக 2019 மே 31 இல் உள்ளவாறு 10 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தில் இருந்தது. இதன் விளைவால், 2020 ஏப்ரல் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் 11 மாத காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் இலக்கினை அடைவதற்கான சாத்தியம் ஐயத்திற்கிடமாக உள்ளது. | ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் நீடிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் பூர்த்தியாக்க முடியாதிருக்கும். | காலப்பகுதிக்குள் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு இயலக் கூடியவாறு ஒப்பந்தகாரர் வலுவாக அறிவுறுத்தப்பட்டது. | ஒப்பந்தகாரரின் வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கு வேண்டப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபைக்கும் இடையில் கைச்சாத்திட்ட புரிந்தணர்வு விஞ்ஞாபனத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், ரூபா 300 மில்லியன் தொகை செலுத்தப்பட வேண்டுமென உடன்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு பெறுகைகளில் மஹாகந்தவேவாவை மற்றும் பிரேரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட உப முறைமைகளை புனரமைப்பதற்கும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு நீர் வளங்களை பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், நீர்ப்பாசன திணைக்களத்திடமிருந்து கால்வாய் புனரமைப்பு வேலைகளிற்காக பொறியியலாளர் மதிப்பீடுகளை சமர்ப்பிப்தில் தாமதம் காரணமாக 2019 ஒக்தோபர் 15 வரை புனரமைப்பு வேலைகள் எதுவும் தொடங்கப் பட்டிருக்கவில்லை. | புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் கால்வாய் வேலைகளில் தாமதம். | நீர்பாசன திணைக்களத்திடமிருந்து கால்வாய் வேலைகள் புனரமைப்பதில் பொறியியலாளர் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படாத போதும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படவில்லை. | நீர்ப்பாசன திணைக்களத்திடம் இருந்து பொறியியலாளர் மதிப்பீடுகளை பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 5,166 மில்லியன் ஒதுக்கீடுகளில், 2018 திம்பெர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் மொத்த 86 மாத காலத்தில் 70 மாதங்கள் கடந்த பின்னர் 29 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தகின்ற ரூபா 2,116.84 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 1,519.95 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவால், செயற்திட்டமானது கடன் பெறுகைகளின் கைதவிர்ப்பிலுள்ள தாமதங்கள் காரணமாக 2018 திசெம்பர் 31 வரை ரூபா 28 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டது. | மேலதிக கடப்பாட்டுக் கட்டணத் தொகை சாட்டுதல் செய்வதற்கான சாத்தியம் | இது கொள்வனவு கட்டத்தில் விளைந்த தாமதம் காரணமாக இருந்ததுடன் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு கொள்வனவு கட்டத்திலுள்ள தாமதங்களை கட்டுப்படுத்துவதற்கான நிலையில் இருக்கவில்லை. | வேலைகளை நிறைவேற்றுவதற்கும் ஒப்பந்தகாரர்களின் வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 வரை றம்பேவ மற்றும் மதவாச்சியவில் உயர் பாதுகாப்பு பொலித்தீன் குழாய் பிரதான பரிமாற்றம் மற்றும் பிரதான விநியோகத்தின் வழங்கல் மற்றும் குழாயிடல் ஒப்பந்த காலப்பகுதியின் 72 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 18 மாதங்கள் கடந்திருந்த போதிலும் பிரதான பரிமாற்றத்தின் 88 கிலோமீற்றரில் 43.98 | செயற்திட்டத்தின் தாமதத்திற்கான சாத்தியம். | ஒப்பந்தகாரர் அவர்களுடைய நிர்மாண நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒப்பந்தகாரரால் பேணப்படுகின்ற திருப்திகரமான முன்னேற்றத்தை வலுவாக அறிவுறுத்தியிருந்தது. எவ்வாறாயினும் அதிகமான வேலைப்பட்டியல் ஈஸ்றர் ஞாயிறு தாக்குதல் காரணமாக வெடித்தல்கள் போன்றவற்றின் சில | ஒப்பந்தகாரரின் வேலைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| கிலோமீற்றர் மற்றும் 163 கிலோமீற்றர் பிரதான பாரிமாற்றத்தில் 98.32 கிலோமீற்றர் என்பவற்றின் குழாயிடல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. | தடைகளால் தடங்கல் ஏற்பட்டிருந்தன. |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட சிவில் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்கள் ஊடாக 2018 சனவரி 01 இலிருந்து போக்குவரத்து வசதி தேவைகளை தீர்ப்பதற்கு செயற்திட்டமானது மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் ரூபா 16.31 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் என்பன செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தப்படாமல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபையின் அநுராதபுரம் பிராந்தி ஆதார நிலையத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் இல்லாதிருந்த கேகாலை பிராந்திய ஆதார நிலைய அலுவலகத்திற்கு தண்ணீர் பவுசர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் நோக்கெல்லைக்கு அப்பால் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது. | கருதரைகள் தெரிவிக்கப்படவில்லை | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு செயற்திட்ட வளங்களை பயன்படுத்தப்பட வெண்டும். |